BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440



படம்: இலக்கியா

Bergen Tamilsk Avis - no.20 - September 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.20 புரட்டாதி - 2022

*வணக்கம்!*

*ஆவணி மாத இதழில், "நோர்வே நாட்டில் வெளிநாட்டு மக்கள் பாகுபடுத்த படுகின்றனர், பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்" எனும் முக்கியமான விடயத்தினைத் தொட்டிருந்தோம். இவ்விடயம் பலரினதும் சிந்தனையினை தட்டியது மட்டுமல்லாது, பல கருத்துக்களையும், கேள்விகளையும் பகிர்ந்து கொண்டமையினை இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும். மேலைநாடுகளில் நிறவாதம், பாகுபாடு, துவேஷம், பகிடிவதை போன்ற நெருக்கடிகளுக்கு பொதுமக்கள் உள்ளாக்கப்படுகின்றனர். இவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளமானவர்களை இங்கு காணலாம். பாடசாலைகள், வேலைத்தளங்கள், விளையாட்டு கழகங்கள், கலைக் கூடங்கள் போன்ற சகல அத்தியாவசிய இடங்களிலும் பாகுபாடுகள் பார்க்கப்படுகின்றன.*

*எத்தனையோ சிறந்த மாணவர்கள் கல்வியை இழந்திருக்கின்றனர். பலர் தகுதி இருந்தும் தமக்கான வேலை கிடைக்காது புறக்கணிக்கப்படுகின்றனர். சிறந்த விளையாட்டுவீரர்கள் அணியில் இடம் கிடைக்காது மைதானத்துக்கு வெளி-யே நிறுத்தப்பட்டுள்ளனர். இதனால் ஏராளமானோர் தளர்ந்து போய், தமது சிறந்த எதிர்காலத்தை இழந்துள்ளனர். மன அழுத்தங்களுக்கும், சோர்வுக்கும் உள்ளானோர் பலருண்டு.*

*நிற பேதம், பாகுபாடு, பகிடிவதை போன்றன எங்குமே சட்டவிரோதமானவைதான். இவற்றினைக் குறைக்கவும், தடுக்கவும் பல்வேறு முயற்சிகள் அரச, மாநகரசபை மட்டங்களில் நடைபெற்று வருகின்றமை சற்று ஆறுதலைத் தருகின்றது. இதற்காக குரல் கொடுக்கவும் பல ஆதரவு நிறுவனங்கள் இங்கு இயங்கி வருகின்றன. அவற்றுள் IMDI மற்றும் Innvandrerrådபோன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவை. அவை பல்வேறு ஆய்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடத்தி வருகின்றன.*

*இந்தச்சூழலில் புலம்பெயர்ந்து நோர்வேபோன்ற நாடுகளில் குடியுரிமையுடன் வாழும் மக்கள் தமது உரிமைகளை பயன்படுத்திக் கொள்ளுதல் மிகவும் முக்கியமானது. நாம் வாழும் நாட்டின் மொழியினை, சட்டவிதிகளை கற்றுக்கொள்வது மட்டுமல்லாது, அரசியல் உரிமைகளையும் பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியமானது. வெளிநாட்டு மக்கள் மேல் அக்கறை கொண்ட அரசியல் கட்சிகளை, தலைவர்களை தேர்ந்தெடுக்க நமது வாக்கு உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.*

*யாரேனும் பாகுபாடு நெருக்கடிகளை சந்திப்பின், அதனை வெளிப்படுத்த தயங்கக் கூடாது. தனிமனிதர்களாய் சந்திப்பதில் சங்கடங்கள் இருப்பின், அதற்கான நிறுவனங்களை நாடினால் அவர்கள் உங்களுக்கான உதவிகளை வழங்க தயாராக உள்ளார்கள்.*

*Ansvarlig redaktør: Julius Antoni*
*ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674*


## கடந்த 20 ஆண்டுகளில் பெண்களின் ஆரோக்கியம்

நோர்வே சுகாதார நலன் அமைச்சகத்தின் சார்பாகத் தயாரித்த "கடந்த 20ஆண்டுகளில் பெண்களின் ஆரோக்கியம்" என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில கண்டுபிடிப்புகளில் 16 முதல் 24 வயதிற்குள், 50 வீதமானோர் நிரந்தர மற்றும் தொடர்ச்சியான பல்வேறு வலிகளால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன்பு அதே வயதுடைய பெண்களுடன் ஒப்பிடும்போது, இன்றைய இளம் பெண்களின் உடல்நிலை மோசமாக உள்ளது.

பெரும்பாலானோர் தாங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக நம்பினாலும், வயிற்றில் வலி, தலைவலி, தூக்கமின்மை மற்றும் உடலில் ஏற்படும் பிற வலிகள் போன்றவற்றால் பாதிக்கப்படுவதாகக் கூறும் பல பெண்கள் உள்ளனர் என்று நோர்வேயின் புள்ளியியல் மூத்த ஆலோசகர் Elin Skretting Lunde அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை தொடர்பான மன அழுத்தம், இன்னும் பல்வேறு அழுத்தங்களினால் ஏற்படும் உளவியல் தாக்கங்களாலும் இந்நிலை ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
31வருடகால ஊடகப்பணி

## மழை!!



கறுப்புக்குள் அடங்கிய காவியை
கருத்துக்குள் அடங்கிய பொருளை
இருளுக்குள் மருளிய ஒளியை
எல்லாமாக கரைத்த புனல்
வாழியவே!

-கரவைதாசன்-

# முகமட்'இன் மூன்று குறிப்புகள்

MOHAMED ALI YASEER ARAFATH



### குறிப்பு:1

## சோழர்கள் ஆட்சியில் முக்கிய நகரங்கள்




1)காஞ்சிபுரம்
2) கங்கை கொண்ட சோழபுரம்
3)தஞ்சாவூர்
4)மதுரை
5)அநுராதபுரம்
6)பொலனறுவை

இலங்கையில் சோழர்கள் ஆட்சிக்கு உட்படாத பிரதேசம் ருஹுனு தேசம் மட்டுமே. இன்றைய ஹம்பாந்தோட்டை மாவட்டம் இலங்கையின் பிரசித்தி பெற்ற முருகப்பெருமான் வள்ளியை மணந்த தளமாக கருதப்படும் கதிர்காமம் சோழர் ஆட்சிக்கு உட்படவில்லை. ஆனால் தெய்வேந்திர முனையில் சோழர்களின் மிகவும் பெரிய கோயிலான தொண்டீஸ்வரம் அமைந்திருந்தது. போர்த்துக்கேயர் அதை தகர்த்து கொள்ளையடித்து இருபத்தியொரு கப்பல்களின் அதன் கருவூலங்களை லிஸ்பனுக்கு கொண்டு சென்றார்கள். தொண்டீஸ்வரத்தின் கற்களை பெயர்த்து அதனை வைத்து கடல் மூலம் காலிக்கு கொண்டு வந்தே காலிக் கோட்டையை போர்த்துக்கேயர் அமைத்தனர். பின்னர் காலிக் கோட்டையை ஒல்லாந்தர் விரிவாக்கம் செய்து அதற்கு தற்போது இருக்கும் வடிவத்தை கொடுத்தனர்.

தொண்டீஸ்வரம் இன்று இருக்குமானால் அது தஞ்சாவூர் பெரிய கோயிலைப் போல உலகப் பிரசித்தி பெற்றதாக இருந்திருக்கும்.

### குறிப்பு:2




Photo - When we got independence in 1948 one Ceylon Rupees which is governed by monetary board backed by sterling pound equivalent to 0.30 USD.

காலனித்துவம் எமக்கு நல்லவை தீயவை இரண்டையும் தந்துள்ளது. காலனித்துவம் மட்டுமல்ல விஜயன் காலத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க காலம் வரை இலங்கை பல்வேறு வகையான ஆட்சிக்குட்பட்ட நிலையில் அதன் சாதக பாதங்களை கண்டுள்ளது இதற்கு பிறகும் இதே பிரவாகம் நிலைத்து நிற்கும். ஆனால் உண்மையில் காலனித்துவ ஆட்சியின் முடிவில் இலங்கை ஆசியாவில் இரண்டாவது தனிநபர் வருமானத்தை கொண்டிருந்தது. நீண்ட ஜனநாயக மரபை கொண்டிருந்தது. பிரிட்டிஷ்பெண்களுக்கு முன்பே நியூசிலாந்திற்கு அடுத்தாக உலகில் இரண்டாவதாக இலங்கைப் பெண்கள் வாக்குரிமை பெற்றார்கள். உலகத்தரம் வாய்ந்த

ரயில்வே, தபால் சேவை, வீதிக்கட்டமைப்பு, தலைநகரில் மின்சார டிராம்வே, தரமான பொதுப் போக்குவரத்து ஊழலற்ற Meritocracy சார்ந்த அரச நிர்வாகம், Westminster பாராளுமன்ற முறை சட்டத்தின் ஆட்சி, பலமான பொலிஸ் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பு, கனவான் அரசியல் இவை அனைத்தும் இலங்கை மக்களுக்கு சிறப்பாகவே பிரிட்டிஷ் ஆட்சி கொடுத்து விட்டு சென்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. எழுபத்தைந்து வருடங்கள் இந்த நாட்டை என்ன செய்து வைத்திருக்கின்றோம்.

இலங்கையின் சுதந்திரம் கிடைத்த போது இலங்கை ரூபாய் இன்றைய நிலையை விட நூறு மடங்கு பலமான நிலையில் இருந்தது.
அதாவது ஆயிரம் ரூபாய் முன்னூறு அமெரிக்க டொலர்களுக்கு சமனாக இருந்தது ஆனால் தற்போது அது மூன்று அமெரிக்க டொலர்களுக்கே சமனாக உள்ளது. அதே பொருளாதார நாணய ஸ்திரத்தன்மையைத் தக்க வைத்து இருந்தால் 30000 ரூபாய் பெறும் அரச ஊழியர்களின் சம்பளம் 9000 அமெரிக்கா டொலர்களுக்கு சமனாக இருக்கும். இதுவே உண்மையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மாத வருமானம். கடந்த எழுபத்தைந்து வருடங்களில் நம்மை நாமே ஆண்டு சாதித்தது இதுதான்.

## குறிப்பு:3



உலகில் அதிக பால் உற்பத்தி செய்யும் தேசம் இந்தியா. இரண்டாவது இடம் ஆச்சரியத்திற்குரியது, பாகிஸ்தான்.

இந்தியா பால் உற்பத்தியின் நான்கில் ஒரு பங்கு அளவுக்கு பாகிஸ்தான் பால் உற்பத்தி செய்கிறது அமெரிக்கா, சீனாவை விட அதிகமான பால் பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இலங்கைக்கு அருகில் இருக்கும் இந்த இருநாடுகளும் பால் உற்பத்தியின் உலக மையங்களாக, சாதனையாளர்களாக இருக்கும் போது இலங்கை அரசியல் வாதி-கள் பால் உற்பத்தியை பெருக்குகிறோம் என்று சொல்லி எதற்காக அவுஸ்திரேலியா நியூசிலாந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மாடுகளை இறக்குமதி செய்ய வேண்டும்.

உண்மையில் இந்த மாடுகள் ஒவ்வாத கால-நிலை காரணமாக ஆயிரக்கணக்கில் இறக்கவும், கால்நடை மருத்துவ செலவை அதிகரிக்கவும், திரவ பால் உற்பத்தி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி மட்டத்தை மிகவும் குறைவாகவும், பால்மா இறக்குமதி மிக உயரிய அளவில் இருக்கவும் மட்டுமே உதவும்.

இந்தளவுக்கு பால்மா நேரடி உபயோகத்தில் இருக்கும் ஒரே நாடு இலங்கை எனலாம். ஏனைய நாடுகளில் அவை உணவு கைத்தொழிலில் confectionery போன்ற துறைகளிலேயே பயன்படுகிறது. பக்கத்தில் இருக்கும் ஒரே காலநிலை இயற்கை பொருளாதார வலயத்தை சேர்ந்த இந்தியா பாகிஸ்தானை தாண்டி இலங்கை பால் உற்பத்தித்துறை போகுமாயின் இதுவே மிகப் பெரிய ஊழல், வீண்விரயம்.
இனியும் இவற்றை உணராமல்தான் நாம் இருக்கப் போகிறோமா? □




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist,
Oslo, Norway)

**கர்ப்ப கால நீரிழிவு என்றால் என்ன?**

பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் பல ஓமோன் மாற்றங்கள் ஏற்படுகின்றது. அவற்றில் ஒன்றாக கர்ப்பகாலத்தில் பெண்களுக்கு இன்சுலினின் அளவு அதிகமாக தேவைப்படுகின்றது. ஆனால் உடற்கலங்கள் தேவையானளவு இன்சுலினை பாவிக்கமுடியாத நிலை ஏற்படும்போது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கின்றது. இதுவே கர்ப்பகால நீரிழிவுநோய் ஆகும்.

**கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் இருப்பது ஆபத்தா?**

கர்ப்பகால நீரிழிவு தாயிற்கும் மகவிற்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தக்கூடியது. தாயிற்கு அதி குருதியமுத்தம் மற்றும் சுகப்பிரசவம் இல்லாமல் சத்திரசிகிச்சை மூலம் மகப்பேறு, எதிர்காலத்தில் நீரிழிவுநோய் வருவதற்கான சாத்தியக்கூறு என்பனவும், மகவினுடைய நிறை அதிகரிப்பதோடு குழந்தை பெருப்பதால் பிரசவத்தின் போது தோழ்பட்டைபோன்ற பகுதிகள் முறிவு ஏற்பட வாய்ப்புமுள்ளது. மகவிற்கு குளுக்கோசினளவு குறைவதற்கு வாய்ப்புள்ளது.

**முக்கிய அறிகுறிகள் என்ன?**

பொதுவாக அறிகுறிகள் எதுவும் காட்டாமல் இருக்கலாம். ஆனாலும் சிலருக்கு தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், உடல்நிறை குறைதல் போன்ற அறிகுறிகள் காட்டலாம்.

**கர்ப்ப காலத்தில் இந்த நோய் விடயத்தில் அவதானிக்க வேண்டிய விடயங்கள் எவை?**

அதிக உடல்நிறையுடைய பெண்கள், கர்ப்பமாவதற்கு முன்பு குருதியில் குளுக்கோசினளவு கூடுதலாக உள்ள பெண்கள், 38 வயதிற்கு பின்பு கர்ப்பமடையும் பெண்கள், குடும்ப அங்கத்தவர்களுக்கு நீரிழிவுநோய் இருக்கும் பெண்கள், ஏற்கனவே கர்ப்பகால நீரிழிவுநோய் ஏற்பட்ட பெண்களுக்கு இந்நிலை ஏற்படும் வாய்ப்பு அதிகமுள்ளதால்

கர்ப்பகாலம் ஆரம்பிக்கும்போதே குடும்ப வைத்தியருடன் ஆலோசித்து குளுக்கோசினளவை அளவீடு செய்யவேண்டும். கர்ப்பகால நீரிழிவுநோய் தோன்றியுள்ளது என சந்தேகிக்கும் பட்சத்தில் விசேட பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு செல்லநேரிடலாம். கர்ப்பகால நீரிழிவுநோய் உறுதிசெய்யப்படும் போது குருதியில் குளுக்கோசினளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம்.

- உடல்நிறையைக் குறைத்தல்
- கிரமமான உடற்பயிற்சி செய்தல்
- உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைப்பது
- நார்ச்சத்துள்ள உணவுவகைகளை தெரிவுசெய்தல் என்பனவுடன்
- வைத்திய ஆலோசனையுடன் மருந்துவகைகள் பாவிக்க வேண்டியும் ஏற்படலாம் •



Anushiya Steak Ranjit



## Velkommen til Bergen Vest Idrettslag

**Hvem er vi?**
Bergen Vest IL er et idrettslag som i utgangspunktet ble opprettet for minoritetsgruppen tamilere. Idrettslaget startet i 1988 og har siden det vært en aktiv klubb for alle aldersgrupper. Arbeidet klubben gjør er bygget på frivillighet, demokrati, tillit og likeverd. I 2018 utviklet klubben seg og ble med i NIF (Norges idrettsforbund).
Formålet bak idrettslaget er i hovedsak å fremme idrett blant de unge, men det er også viktig for klubben å inkludere de eldre. Klubben driver blant annet med aktiviteter som volleyball, fotball, cricket og dametrening.
Volleyball og fotball er idretter som blir drevet av alle aldre og kjønn. Cricket blir i hovedsak spilt av menn. I 2021 ble dametrening opprettet, og idrettslaget har i dag opp til 20 aktive damer som trener alt fra yoga og zumba til styrke trening. I tillegg har idrettslaget et åpent klubbhus der medlemmene kan blant annet sy klær, og spille bordspill som carrom, bordtennis, sjakk e.t.c.

De siste årene har BV IL arrangert både volley-og fotballturneringer. Den 17.September 2022 gjennomførte idrettslaget sitt første ”Bergen Vest Challenge Cup 2022” i Vestlandshallen (Challenge cup; vinneren fikk en vandrepokal). Turneringen besto av 12 deltakende lag, 4 lag var fra Bergen, 7 fra Oslo og ett lag fra Frankrike. Klubben fikk gjennomført en vellykket turnering og ble meget fornøyd med utførelsen av turneringen.
De 12 lagene kjempet om 1.plassen og en stor vandrepokal på 80 cm. Sluttresultatet ble sikret hos Atletico Bergen, som hadde en finale mot Noreel Blue fra Oslo. I tillegg bidro de lokale barnelagene til en motiverende og vennlig stemning på banen.
I tillegg deltar Bergen Vest IL både på turneringer arrangert i Oslo, og på Bergen internasjonale turneringer som arrangeres av Vestlandsrådet om sommeren. Laget som stiller på turneringene har spillere med ulike etnisiteter.



Bergen Vest



Atletico Bergen




Foto: Julius Antonipillai,
Norway Radio Tamil (15.09.2022).




Spørsmålet om hva «diaspora» betyr ble fremmet til DiasporA Tamil Archives på arrangementet den 15. september 2022. Begrepet er observert som nytt blant grasrotnordmenn. Med Nichola G. Stephen, Dhayalan Velauthapillai, Macwin Yogendran hadde vi stor glede å delta i paneldiskusjonen på det norske arrangementet, «det tamilske Bergen», arrangert av Det Vestnorske Teateret og Memoar. Panelet ble ledet av Bjørn Enes fra Memoar. Selv om arrangementet feiret tamilsk historie i Bergen, ser DiasporA Tamil Archives arrangementet som en anerkjennelse av historien til den tamilske diasporaen over hele Norge. Det er også bemerkelsesverdig at arrangementet fant sted i Bergen, hvor Antony Rajendram landet for 66 år siden som også har 90-årsjubileum i år. Arrangementet ble feiret med kulturinnslag av Annam Dance og elever fra Annai Poopathi Tamilsk Kultur Senter i Bergen.

Kulturinnslag hadde en blanding av dans, sang, musikk og taler. Salvi Mohaneswaran ga en tale om Thirukkural (gammel tamilsk litteratur). Arush Ramesh ga en tale om 27. november, den dagen hvert år tamilere over hele verden minner nasjonale helter som kjempet for tamilenes rettigheter på Sri Lanka. Jenter fra Annam Dance, ledet av Nichola G. Stephen ga en opplevelse av tamilsk dans og musikk. Sist, men ikke minst Abinaya Tharmalingam sang en vuggesang sunget av en far til sin datter. Hele kulturkvelden ble ledet av Frøydis Århus, leder på det Vestnorske Teateret. I en samtale opplyste hun at dette er første gang det tamilske språket høres i Det Vestnorske Teateret.

Panel diskusjonen ga et smakebit av hvem det tamilske Bergen er. Den representerte også en blanding av første- og andre generasjons-tamilere. Panelet snakket om undertrykkelse, migrasjon, identitet, behov for identitet, søk etter tilhørighet.

Tema om hva «diaspora» betyr, og samfunnsbehovet som trigget oppstart av DiasporA Tamil Archives ble også tatt opp i panel diskusjonen. Begrepet "diaspora" betyr en gruppe mennesker som er spredt over hele verden fra deres kjerneregion, kjent som deres hjemland. Det er en tvungen migrasjon for å redde deres liv og eksistens. Den andre delen av en diasporisk karakteristikk er å bevare og praktisere deres innfødte kultur, historie og språk som deres identitetsformue. Eelam tamilere (Tamiler fra Eelam som i dag heter Sri Lanka) har disse to komponentene som gjør dem til en "tamilsk diaspora". Men tamilsk diaspora, for eksempel i Norge, integreres også samtidig i vertslandet, som har blitt et hjemland for tredje og fjerde generasjon tamiler. Alle de tre deltakerne i paneldiskusjonen, som er Bergensresidenser ga uttrykk for disse to komponentene. Dette refererte DiasporA Tamil Archives til i sin forklaring på arrangementet.

I senere tide inkluderer begrepet ”tamilsk diaspora” også tamiler fra Sør-India. Selv om tamiler fra Tamil Nadu i Sør-India har en frivillig migrasjon for økonomiske, utdanningsmessige eller familierelaterte årsaker, beriker de aktivitetene for å bevare og praktisere tamilsk kultur, historie og språk.

Dagen, 15. september, da spørsmålet om «diaspora» ble fremmet har også en intuitiv betydning. Her er derfor en utvidet forklaring på spørsmålet hvor vi også minner Lt. Col. Thileepan. Han er en av mange som har blitt kilden for vår diasporiske identitet. Thileepan var medisinstudent og leder av frigjøringsbevegelsens politiske avdeling i Jaffna. For 35 år siden gikk han gjennom en sultestreik fra 15. til 26. september 1987 med fem krav til den indiske og srilankiske regjeringen.

- trekke tilbake singalesiske hærleire fra tamilske områder,
- suspendere alt rehabiliteringsarbeid inntil dannelsen av en midlertidig (tamilsk) regjering for de tamilske hjemlandet,
- stoppe den fortsatte singalesiske koloniseringen i det tamilske hjemlandet,
- stanse etableringen av singalesisk bemannede politistasjoner i tamilske områder og
- løslate alle internerte holdt under loven om forebygging av terrorisme (Prevention of Terrorism Act).

Perioden mellom juli 1983 til juli 1987, kjent som Eelam War I, var den innledende fasen av den væpnede konflikten mellom Sri Lankas militære styrker og Liberation Tigers of Tamil Eelam. Dette var perioden da en masseeksodus av tamiler ble tvunget til å forlate deres hjemland. Selv om et lite antall Eelam-tamiler hadde tidligere migrert frivillig på grunn av økonomiske, utdanningsmessige eller familierelaterte årsaker, dannet masseutvandringen tittelen “Tamil diaspora” og gjorde den internasjonalt kjent. Dessverre, i september 1987, selv etter fredsavtalen, «Indo-Sri Lanka Peace Accord», mistet Lt. Col. Thileepan livet på grunn av mislykket forsikring av rettighetene til tamilere. I dag etter 35 år er kravet til Thileepan fortsatt presserende for tamilere i Nordøst-Sri Lanka (Tamil Eelam). Baheerathy Kumarendiran

---

## சூறையாடிய காற்று -ஹம்சத்வனி-

*தீவுகளையும் நகரங்களையும்*
*மரம்செடிகொடிகளையும் திருகிப்போட்டது*
*சூறைக்கற்று.*
*வானில் மேகங்கள் அடர்ந்து அலைகின்றன.*
*வரப்போகும் குளிர்*
*காற்றில் பரவுகின்றது.*
*வீட்டின் பின்புறத்தில் செரிமரத்தின் கீழ்*
*தன் உணவினை குழிதோண்டிப் புதைக்கிறது*
*அணில்.,*
*சற்றும் சலிப்பு இல்லாமல்.......*
*முயற்சிக்கும் உண்டோ அடைக்கும்தாள்.*
*மீண்டும் அணில் வருகிறது.*
*எல்லா நம்பிக்கைகளையும்*
*ஆழமாகத்தோண்டி புதைக்கவேண்டியுள்ளது.*
*இயலாமைமுன் வாழ்க்கை சிதைந்து*
*கொண்டு இருக்கிறது.*
*எனக்கு ஒவ்வொருகணமும் யுகமாய்*
*நகர்கிறது.*
*வெறுப்பு சுற்றிலும் சொரிகிறது.*
*தாய் எனும் மெய்பொருள்*
*குரூரமாய் தலைவிரித்தாடுகிறது.*
*எப்படி தனியாய் தவித்து வந்தேனோ*
*அப்படியே போகவும் வேண்டும்.*
*எல்லாம் நடந்தேறுவதன்முன்*
*மனமுவந்து என்செயலை செய்யவேண்டும்.*
*இருப்பு பெரும்சுமை*
*தலைமேல் இறங்குகிறது.*
*சுவாசப்பைகளை நிறைக்கின்ற காற்று*
*இரும்பைப்போல கனக்கின்றது.*
*நித்திரையின் அமைதியும் ஆசுவாசமும்*
*அற்றுப்போய்விட்டது.*
*உயிர்த்தல் மெல்லிய சிலந்திவலையில்*
*ஊசலாடுகிறது.*
*செய்தி!*
*மீண்டும் ஒருபெரும்புயல் பூதாகாரமாய்*
*கடலில் மையம்கொள்கின்றது...*

*(2017 புரட்டாதி 11*
*கடலில் கருக்கொண்டு மூர்க்கத்தனமாக*
*தரையை சூறையாடிய கொடும்*
*காற்றின்பின் எழுதியது. இப்போதான் பிரசுரிக்கும்*
*சந்தர்ப்பத்தை எட்டியிருக்கிறது)*

# சிலங்கிரி



## மனோ France

மருத்துவரின் ஆலோசனைப்படி தினமும் நடக்கத்தொடங்கினேன். ஆரம்பத்தில் சினமாகத்தான் இருந்தது. நாளடைவில் சுமை சுவையாக மாறியது. காதுகளில் வோக்மனை கொழுவிக்கொண்டேன். பழைய புதிய பாடல்கள் மட்டுமல்ல புதியபுதிய இசைகளும் செவிகளுக்கூடாக ஆழ்மனதுள் இறங்கின.
சமூக ஆளுமைகள் செவிவழி இறங்கி என்னைப் பரவசப்படுத்தினர்.
இதைவிடவும் தொலைபேசி உரையாடல் எனக்கு இன்பத்தைத் தந்தது. நீண்ட நேரங்கள் உரையாடினேன். உலகெமெல்லாம் எனக்கு நண்பர்கள் வியாபித்து வளர்ந்தனர். உரையாடவேண்டிய தேவைகளும் எனக்குள் நிறையவே இருந்தன.

காலை மாலையென நடையில் இன்பத்தை ருசித்தேன்.
இப்படியாகத்தான் ஒரு பின்மாலைப்பொழுதில் டென்மார்க்கிலிருக்கும் எனது பள்ளித்தோழியுடன் மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்தபோது, எனது பிடரி கழுத்துப்பகுதிக்குள் ஒரு கத்தி சடக்கெனப் பாய்ந்தது. நிலைதடுமாறி கீழே விழுந்தேன். அருகில் சிலங்கிரி ஆவேசமாக நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் கத்தி இருந்தது. கத்தியை மீண்டும் இறுகப்பற்றி அடுத்த குத்துக்கும் அவன் தயாரான போது நான் எனது முழுப்பலத்தையும் ஒருங்குதிரட்டி எட்டி அவனை உதைத்தேன். சிலங்கிரி கையிலிருந்த கத்தி தவறி எங்கோ விழுந்தது.

பெருகிய ரத்தத்தைக் கட்டுப்படுத்த முயன்றேன். கைகளால் கழுத்துப் பகுதியை பொத்திப்பிடித்தேன். ரத்தம் அடங்கியதாயில்லை. தெரு இரத்தத்தால் நனைந்து கொண்டிருந்தது. சிலங்கிரியும் அடங்கவில்லை. தனது சப்பாத்துக் கால்களால் எனது முகத்தை தெருவில் அழுத்தினான். கன்னம் தெருக்கற்களில் தேய்ந்து சிதைந்தது. என் உடலை ஏறி மிதித்தான். அவனது உடல் ஆவேசத்தால் துடித்தது. மாறி மாறி என்னை உதைந்து தள்ளினான்.
தெருவிலே போனவர்கள் பலர் விடுப்புப் பார்த்தார்கள். சிலர் "ஏய்! ஏய் நிறுத்து!" என்று உரக்கக் கத்தினார்கள். ஒருவன் தொலைபேசியில் வீடியோ எடுத்துக்கொண்டிருந்தான். ஒரு மனிதர் மட்டும் கிட்ட நெருங்கி சிலங்கிரியைத் தடுத்தார். அவன் திமிறியபடி தொடர்ந்தும் எட்டி எட்டி என்னை உதைந்து கொண்டிருந்தான். இரத்தம் நிறையவே வெளியேறியிருந்தது. எனக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது. நான் மயங்கிக்கொண்டே போனேன்.

குழப்பமாக இருந்தது. சிலங்கிரி ஏன் இவ்வளவு வெறிகொண்டு மூர்க்கமாக என்னைத் தாக்கினான்? உடல் வலித்தது. மனது அதைவிட வலித்தது.
மனைவி கட்டில் விளிம்பில் உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். எனக்குச் சங்கடமாக இருந்தது. முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டேன். மனைவியின் கண்கள் கலங்கியிருந்தன.
பிள்ளைகள் அப்பாவைப் பார்க்க அச்சப்பட்டார்கள். எனக்கு வெட்கமாக இருந்தது.
ஓர் எறும்பைக்கூட நசிக்க சிரமப்படும் என்மீது ஒரு கத்தி பாய்ந்ததை என்னால் ஜீரணிக்கமுடியவில்லை.

சிலங்கிரிக்கு என்மீது அப்படி என்னதான் கோபம்?
ஓம்! அவன் எனது நண்பன் தான். என்னை விட வயதில் குறைந்தவன். ஒரு காலத்தில் என்னோடு மிக நெருக்கமாக இருந்தான். பின்னர் சிலகாலம் என்னோடு பணிபுரிந்தான். எனது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு பணிபுரிவது அவனுக்குச் சிரமமாக இருந்தது. வேலையை விட்டு வெளியேறினான். என்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தினான். அவனையிட்டு நான் அதிகம் கவலையடைந்தேன். அத்துடன் அவனுக்கும் எனக்குமான உறவு முறிந்தது. எதிர்பாராத விதமாக அவனை நான் தெருக்களில் கண்டபோதுகூட என் கண்களுக்கு அவன் தெரியவேயில்லை.

பழகுவதும் பிரிவதும் கூட இயற்கையின் நியதிதானே! ஆனால், அவனுக்கு மட்டும் என்மீது ஏன் இவ்வளவு கொலை வெறி? செக்கன் கணக்கில்தானே என்னுயிர் காப்பாற்றப்பட்டுக் கிடக்கிறது? ஆயிரமாயிரம் காரணங்களை நான் வரிசையாக அடுக்கலாம். என்னை நான் நியாயப்படுத்தலாம். சிலங்கிரி மிக மோசமான பேர்வழியாகக்கூட இருக்கலாம். இருக்கட்டும்! அவன் என்மீது இவ்வளவு வன்மம் கொண்டலைவதற்கு நான் ஏதோ வகையில் காரணமாகி இருக்கிறேன் என்பதை எப்படி நான் மறுப்பது? ஆனால், அது என்ன? எங்கே நான் தவறிழைத்தேன். அப்படி நானிழைத்த தவறுதான் என்ன? எதிரியைக்கூட காயம்படுத்தாத ஞானத்தை நான் எங்கிருந்து பெறுவேன்? எப்படிப்பெறுவேன்? பொறாமை கூட மனித இயல்புகளில் ஒன்றுதானே. எதிரிகள் உருவாவதில்லை. உருவாக்கப்படுகிறார்கள். அறியாமையும் அனுபவ முதிர்ச்சியின்மையுமே எதிரிகளை உருவாக்குகின்றது.

தவறுவிடாதவர் மனிதரல்ல. நேரான மரங்களே முதலில் தறிக்கபடுகின்றன. நேர்மை உண்மை மட்டும் வாழ்வை வசப்படுத்திவிடாது. மனதில் பட்டவற்றையெல்லாம் நேருக்கு நேராக வீசி எறிவது எவ்வளவு தவறானது என்பதை இப்போது உணர்கிறேன். சிலங்கிரியின் கத்தியைவிட என் வார்த்தைகள் கூராக இருந்திருக்கின்றன.

பலர் முன்னிலையில் சிலங்கிரியை நான் தலைகுனியச் செய்திருக்கிறேன். சிலங்கிரியின் குற்றத்திற்கு அளவிற்கதிகமான தண்டனையை வழங்கியிருக்கிறேன். இது சிலங்கிரியின் மனதில் ஆழமான காயத்தினை ஏற்படுத்தியிருக்குமா?

கேள்விகளே தண்டனைதான். பதில் சொல்ல முடியாத கேள்விகளை தயவுசெய்து தவிருங்கள்! முதுகிற்கு சுடுநீர் ஒத்தடம் கொடுத்தால் நல்லது போலிருந்தது. கேட்கமுதல் மனைவியிடமிருந்து சுடுநீர் பொதி கிடைத்திருக்கும். ஆனால், கேட்பதற்கு எனக்கு ஏதோ சங்கடமாக இருந்தது. எழுந்து போகவும் முடியவில்லை. இந்த நிலையில் நான் எழுந்து சென்று சுடுநீர்ப்பொதியை தயாரிப்பது மனைவியை அவதிமதிப்பதாகவும் அமையும் என்பதை உணர்ந்தேன். பேசாமலே படுத்துக்கிடந்தேன்.

சிலங்கிரியின் ஆவேசமான கண்கள் என்னைப் பொசுக்கிக்கொண்டிருந்தன. அவன் எவ்வளவு நாட்களாக அடக்கி வைத்திருந்த கோபத்தையும் வெறுப்பையும் என்மீது கொட்டியிருக்கிறான்.
நான் இனி எப்படி நண்பர்களின் முகத்தில் முழிப்பேன். குற்றமில்லாத ஒரு அப்பாவி குற்றவாளியாக முடியாது. ஓம்! நானும் ஓர் குற்றவாளிதான். எவ்வளவு தேடியும் என் குற்றத்தை என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. சரிபிழைகள் யார் மீதும் இருக்கட்டும்! இவ்வளவு வன்மம் கொண்ட எதிரியை என்னால் உருவாக்க முடிந்திருக்கிறது என்றால் நான் இறந்துவிடுவதுகூட பரவாயில்லை என்றே ஒருகணம் தோன்றியது.

உலகம் ஒன்றும் அவ்வளவு புனிதமானதல்ல. ஆங்காங்கே சில பொய்களும் உருட்டல் பிரட்டல்களும் ஓடிவிளையாடிக் கொண்டுதான் இருக்கின்றன. சில இடங்களில் கண்டும் காணாமலும் கடக்கவேண்டித்தான் இருக்கும். நீ உன்னைச் சரிசெய்துகொள். அடுத்தவர்களைச் சரிசெய்ய ஆசைப்படாதே. காலம் திரும்பத்திரும்ப போதித்துக்கொண்டே இருக்கிறது.

சிலங்கிரியும் நீயும் இந்த உலகத்தில் சம உயிரிகள்தான். இந்த உலகத்தில் நீ உன்னை நல்லவனாக எண்ணிக்கொண்டிருக்கலாம்! அதேபோலத்தான் அவனும். உனக்கு நண்பர்கள் இருப்பதுபோல அவனுக்கும் இருக்கத்தான் செய்வார்கள். சிலர் இருவருக்கும் நெருக்கமான நண்பர்களாக இருக்கவும் சாத்தியமுண்டு. அவர்கள் நாளை உன்னை வந்து சுகம் விசாரித்துவிட்டும் போகலாம். மனதை அமைதியாக்கிக்கொள்.

வீட்டுக் கதவின் இனிமையான மணியோசை கேட்டது.
மனைவி எழுந்துபோய் கதவைத்திறந்தார். சிலங்கிரி பூங்கொத்துடன் வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

# யார் இந்தப் பொன்னியின் செல்வன்கள்?



**அ.மார்க்ஸ்**

"பொன்னியின் செல்வன்" நாவல் மற்றும் அந்தத் தொடர் நாவலை எழுதிய கல்கி கிருஷ்ணமூர்த்தி பற்றி அந்தப் பெயரில் திரைப்படம் தயாரிப்பவர்கள், அதற்கு வசனம் எழுதியுள்ள ஜெயமோகன் வரை ஆய் ஊய்ன்னு அடிக்கிற லூட்டி தாங்க முடியவில்லை. இன்று என்னிடம் ஒருவர், "சார்! இந்த ராஜ ராஜ சோழன்தான் அந்தக் காலத்துல நாகப்பட்டுணத்துல சூடாமணி விகாரைன்னு புத்தருக்கு கோயில் கட்டிக் கொடுத்தாராமே..." எனப் படு சீரியசாகக் கேட்டார்.

ஏதோ ராஜராஜ சோழன் பௌத்தத்தை எல்லாம் ஆதரித்தவன் போலவும், மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாக அவன் இப்படி நாகப்பட்டிணத்தில் "சூடாமணி விகாரை" என பௌத்த வழிபாட்டுத்தலம் ஒன்றைக் கட்டி பௌத்தர்களுக்காக அளித்ததாகவும் சில ஆண்டுகளுக்கு முன்னர் சிறுபத்திரிக்கை எழுத்தாளர்களில் ஒருவர் ஒரு கட்டுரை ஒன்றை எழுதி இருந்தார். ராஜராஜன் மத ஒற்றுமைக்காக வாழ்ந்தவன் எனப் புகழும் நோக்கத்துடன் எழுதப்பட்ட கட்டுரை அது. ஒரு இணைய இதழில் அது வெளிவந்தது.

"அந்த ராஜராஜ சோழன்தானே இலங்கைத்தீவின் மீது படை எடுத்து அனுராதபுரம், பொலனறுவை முதலான இடங்களில் உள்ள பௌத்தச் சின்னங்களை எல்லாம் அழித்தவன். எரியூட்டியவன். அழித்த நகரங்களுக்கு "ஜனநாதமங்கலம்" எனத் தன் பெயரைச் சூட்டிப் பெருமிதம் கொண்டவன். கொள்ளை அடித்து அள்ளி வந்தவன். இன்றளவும் புத்தரை வணங்குபவர்களால் அஞ்சப்படுபவன். வெறுக்கப்படுபவன். அதெப்படி இத்தனை பெருந்தன்மையுடன் பௌத்தர்களுக்கு அவன் ஆலயம் கட்டித் தந்தான் எனச் சொல்கிறீர்கள்?" என நான் அன்று ஒரு மறுப்பைப் பதிவு செய்தது நினைவுக்கு வருகிறது.

சரி. ராஜராஜனின் ஆட்சியில் நாகையில் அன்று இந்தச் சூடாமணி விகாரம் கட்டப்பட்டதன் பின்னணியாக இருந்த வரலாற்று உண்மைகளைக் காணலாம். எல்லாம நாடான சீனத்துடன் அப்போது சோழ மன்னர்களுக்கு மிகப் பெரிய அளவில் வணிகத் தொடர்பு இருந்தது. பௌத்த சீனத்தின் நன்கொடை மற்றும் நல்லெண்ண நோக்கில் எழுப்ப பட்டதுதான் நாகை விஹாரை. நாகை அன்று அவர்களுக்கு ஒரு முக்கியமான துறைமுகம். சற்று வெளிப்படையாகச் சொல்வதானால் சூடாமணி விகாரம் என்பது சோழனின் பெருந்தன்மையின் விளைவல்ல. முழுமையான வணிகத் தந்திரம்! ராஜராஜன் பௌத்த வழிபாட்டுத் தலம் கட்டித் தந்திருப்பதெல்லாம் சமையப் பொறையின் அடையாளம் அல்ல. அது அன்றைய காலச் சூழலின் விளைவு. சீனர்களுடனான வணிகம் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ராஜராஜனின் புகழ் பாடுவது என்பதில் இந்துத்துவர்களும் தீவிரத் தமிழ்த் தேசியர்களும் பல நேரங்களில் கைகோர்த்து நிற்பதைக் காணலாம்.

*இலங்கையர்கள் ஐந்தாம் மகிந்தனின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வெந்து கிடந்த நேரத்தில் அவர்களை அவனிடமிருந்து விடுவித்த மகா மனிதநேயப் பணியைச் செய்தவன் ராஜராஜன் எனச் சில ஆண்டுகள் முன் இங்கொரு கதையைத் தமிழ்த் தேசியர்கள் முன்வைத்தனர்.*

*எல்லாப் படை எடுப்பாளர்களும் தாங்கள் அடித்த கொள்ளை, அதன்மூலம் பெற்ற அரசியல் பலன்கள் ஆகியவற்றை மறைக்க வழக்கமாகச் சொல்லும் கதைதான் இது. அந்தக் கால படை எடுப்பாளர்கள் முதல் இந்தக் கால புஷ் ட்ரம்ப் வரை பயன்படுத்திய/ பயன்படுத்துகிற கொடூரமான தந்திரம்தான் இது. சதாம் உசேனிடமிருந்து ஈராக் மக்களைக் காப்பாற்றப் படை எடுத்ததாகத்தானே புஷ்சும் சொல்லிக் கொண்டார். ஹிட்லர், முசோலினி, ராஜபக்ஷே யார்தான் இதற்கு விதிவிலக்கு?*

*இலங்கைத் தீவையும் பொலனறுவை, அநுராதபுரம் முதலான பௌத்த புண்ணியத் தலங்களையும் அழித்து அவற்றுக்குத் தன் பெயரில் "ஜனநாத மங்கலம்" எனப் பெயரிட்டு ஒரு தீராத சிங்கள "தமிழ்ப் பகைக்கு வித்திட்ட ஒரு ஆக்ரமிப்பாளன்தான் ராஜராஜன்."*
*"தேவரடியார்கள் மரியாதைக்குரியவர்கள். அவர்களை தேவதாசிகளுடன் ஒப்பிடக் கூடாது" என இன்று ராஜராஜ சேவையில் இறங்கியுள்ள இந்த ராஜராஜன் திரைப்படத் தயாரிப்பாளர் அதன் வசனகர்த்தா எல்லாம் இப்படித்தான் சொல்வார்கள்.*

*தான் இப்படியானப் படைஎடுப்புகளில் கொண்டுவந்த பெண்களை ராஜராஜன் வழியில் வந்த குலோத்துங்கன் தனது அந்தப்புரத்திற்குக் கொண்டு சென்றதை எதிர்த்து அக்கால மக்களே கிளர்ச்சி செய்ததை எல்லாம் இன்றைய ராஜராஜப் புகழ்பாடிகள் பேசமாட்டார்கள். நானும் வேல்சாமியும் சுமார் முப்பதாண்டுகள் முன் எழுதிய கட்டுரை ஒன்றில் இதனை ஆதாரத்துடன் பதிவு செய்துள்ளோம். குலோத்துங்கன் செய்ததற்கு ராஜராஜன் என்ன செய்வான் என மகா புத்திசாலித்தனமாக இன்றைய ராஜராஜ வழிபாட்டாளர்கள் கேட்கலாம். யார் செய்தார்கள் என்பதல்ல இங்கு பிரச்சினை. தேவரடியார் எனும் நிறுவனம் எங்கு கொண்டுபோய் விடும் என்பதுதான் நாம் இதன் மூலம் புரிந்துகொள்ள வேண்டியது. அப்படி மன்னர்களின் போகங்களுக்குப் பலியானவர்கள்தான் மக்கள். தேவதாசிப் பாரம்பரியத்திற்கு எதிராக இங்கே தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் போராடியபோது அந்தக் கேவலத்தைக் காப்பற்ற முனைந்த சத்திய மூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரி ஆகியோரின் குரலில் இன்று பேசுகிறவர்கள்தான் இன்றைய இந்த ராஜராஜன் புகழ்பாடிகள்.*

*தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியது ராஜராஜன்தான் என்பதைப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின் 1907ல் முதன் முதலாகக் "கண்டுபிடித்துச்" சொன்னது வெள்ளைக்கார அறிஞர்கள் தான். இடைப்பட்ட ஆயிரம் ஆண்டு காலத்தில் ராஜராஜன்தான் அந்தக் கோவிலைக் கட்டினான் என எந்தத் தமிழ் நூல்களிலும் பதிவில்லையே ஏன்? ஏன் ராஜராஜனைத் தமிழ் மக்கள் மறந்தனர்? அல்லது புறக்கணித்தனர்?*
*அவ்வளவு ஏன், அத்தனை தமிழ் நூல்களையும் அழிவிலிருந்து காப்பாற்றினாரே உ.வே.சா அவருக்கு 1907 வரை ராஜராஜன் யார் என்றே தெரியாதே?*
*தலித் ஒருவரின் பெயரை கல்வெட்டில் பொறித்தான் ராஜராஜன் என கூறுகிறார்கள். முதல் முதலில் தலித்களுக்குத் தனிச் சுடுகாடு கட்டியதும் அவன்தானே! இல்லையா? கராஷிமா, சுப்பராயலு முதலானோரின் சோழர்கால ஆய்வுகளைக் கருத்தூன்றிப் படித்திருந்தால் இதை எல்லாம் இவர்கள் அறிந்திருக்க்க் கூடும்.*

*இப்படி இன்று மன்னர்களின் புகழ்பாடிச் சேவகம் செய்யும் கேவலம் தமிழகத்தை ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிக் கொண்டு செல்கிறது. இதெல்லாம் தமிழனின் பெருமையல்ல. வீழ்ச்சி. (இது ஒரு பொழுதுபோக்குத் திரைப்படம் என்பதைத் தாண்டி ஏதோ தமிழகத்தின் பண்டைப் பெருமை என்கிற ரீதியில் முன்வைக்கப்படுவதால்தான் இதை எல்லாம் இங்கே சொல்ல வேண்டி உள்ளது. சொல்ல இன்னும் சில செய்திகள் உள்ளன.)*

**நன்றி: தோழர் அ.மார்க்ஸ்**

# தாவீதுத்திறவு

-தமயந்தி.



தொடர்- பாகம் 3

மீண்டும் அண்ணாவி தாவீதுத்திறவு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.
"தொடச்சியா நிமிந்திருக்கவும் ஏலாது ராசா, சாஞ்சிருக்கவும் ஏலாது. நாரிக்க விண்விண்ணெண்டு குத்துது குடயுது"

"தண்ணி ஏதாவது குடிக்கப் போறீங்களாய்யா?"

"இல்லயப்பன், இப்ப பறுனாந்துக் கும்பாவின்ர பேரன்காறன் மருசல் வந்திடுவான்.
காலமயும் பின்நேரமும் கட்டாகட்டியா ஒவ்வொருபோத்தில் கள்ளுக் கொண்டு வந்து தந்திடுவான் பொடியன்.
அந்தப்பிள்ளயும் இந்த வன்னி வனாந்திரமெல்லாம் கிடந்து, ஆண்டவர் சிலுவயில படாப் பாடுகளெல்லாம் பட்டுச் செத்துப்புழைச்சு வந்தான். புனர்வாழ்வெண்டு சொல்லி கிட்டடியிலதான் விடுவிச்சாங்கள். ஏலாக்காலோட நாலைஞ்சு பனயளச் சீவித்தான் சீவியத்தப் போக்காட்டுறான்"

அண்ணாவியார் சொல்லிக் கொண்டிருக்கவே கள்ளும் வந்தது.

"தொட்டமகன், இதில சத்து இரடா..."

"இல்லத் தொட்டப்பு, நான் கோப்றட்டிக்குப் போகவேணும்"

"போகல்லாம் சத்து இரு இதில, தொட்டாச்சியட்டத் தேத்தண்ணி குடிச்சுப்போட்டுப் போடா புள்ள, இஞ்சேரண.... தொட்டமோன் வந்திருக்கிறான் ரெண்டுபேருக்கும் தேத்தண்ணி கொண்டாண"

கள்ளுக் கொண்டுவந்த மருசலை தனது பக்கத்தில் கிடந்த மரக்கதிரையில் உட்கார வைத்தார் அண்ணாவியார்.

"இவன் தம்பி பெரிய போராளி ராசா. வன்னிச்சண்டையில கால்ல காயம் பட்டுப்போனதோட, மனிசிக்காறியயும் காணவத்துக் குடுத்துப்போட்டு, ரெண்டு குமர்ப்பிள்ளயளோட தப்பியொட்டி வந்து கிடக்கிறான். ஆச்சி கொண்ணந்து காட்டின அந்தப் படத்தில இருந்தவள்தான் இவன்ர மனிசிக்காறி. இவன் பன்ரெண்டு வயசிலயே போராளியாப் போய், போதாததுக்கு அவளயுஞ் சடங்குமுடிச்சு, பாதியில துலைக்கக்குடுத்து, நாசங்கட்டி இப்ப நடுத்தெருவில வந்து நிக்கிறான். கவனிப்பார் கிடயாது. நாலு பனயச் சீவித்தான் ரெண்டு குமரயும் காமேந்து பண்ணுறான்"

"விடுங்க தொட்டப்பு, நான் கோப்பிறட்டிக்குப் போகவேணும்"

"இரடா புள்ள, தொட்டாச்சியட்டத் தேத்தண்ணி குடிச்சுப்போட்டுப்போ"

மகிறம்மாஆச்சி இரண்டு கோப்பைகளில் தேநீரோடு வந்து எனக்கும். மரிசலுக்கும் கொடுத்தார்.

சாய்வுநாற்காலிக் காலோடு ஆயத்தமாக இருந்த சீவிச்செப்பனிட்ட தென்னங்குவளையில் மருசல்

கொண்டுவந்து கொடுத்த கள்ளை வார்த்தார். இரண்டு மிடறு சுவை பார்த்துவிட்டு, மடியிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு தொடர்ந்தார். மருசல் ஒரே மூச்சில் தேநீரைக் குடித்துமுடித்து, எங்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.

"எதில விட்டனான் தம்பி..... அ, அப்ப மலாயச்செட்டியார் அண்ணாவியாரப் பாத்து விரும்பினதக் கேளும் சூசமுத்து எண்டிருக்கிறார். அண்ணாவியார் முதலே ஒரு பொருளில கண் வச்சிற்றார். அதென்னெண்டு கேட்டீரெண்டால்...., நாகம்மாள் கோயிலச் சுத்திப் பாக்கிறபோது, கோயில் பின்வளவில தறப்பாள் படங்கால மூடிக் கிடந்தது அது. மலயாளப் பெருந்தச்சன் மலேயாத் தேக்கில செருக்கின பெரியதொரு அஞ்சுதல நாகாசனம். மின்னலடிச்சு நடுவால வெடிச்சு ரெண்டாப் பிளந்துபோய்க் கிடந்தது. அதில ஒருபாதியத் தர ஏலுமோ செட்டியார் எண்டு சட்டெண்டு வாய்விட்டுக் கேட்டுப் போட்டார். இதக் கொண்டுபோய் என்ன செய்யப்போறீர் சூசமுத்து, தாறன் கொண்டுபோம், வேறயேதாவது கேளும் சூசமுத்து எண்டிருக்கிறார். அதுமட்டும் போதும் வேறயொண்டும் வேணாமெண்டு சொல்லிப்போட்டு, பிசப்பாண்டவற்ற செல்வாக்கில மலாயாவிலயிருந்து அஞ்சுதல நாகத்தின்ர ஒருபாதியக் கப்பல்ல கொண்டுவந்து சேத்துப்போட்டார். அதக் கொம்பேராவாக சீவி வச்சு, பர்மாவிலயிருந்து பாய்வத்தயில தேக்குமரங்கள முழுசுமுழுசா வருவிச்சு, காளிகோயிலடித் தச்சரக் கொண்டுவிச்சு பலகசீவி, வன்னிவேம்பில வங்குகள் வெட்டிக் கொண்டுவந்து, மூண்டு வருசம் சிலவழிச்சுச் செய்ததுதான் அண்ணாவியாற்ற நாககொம்பேரா சிறகுகட்டி வள்ளம்.

ரெண்டுகூட்டம் மடி கயிறுகளயும், இருபது முப்பது தொழிலாளியளயும் ஏத்திப்பறிச்சுத் தொழில் செய்யுமாப்போல பெரிய கலம் அது. அந்தச் சிறகுகட்டி கடல்ல இறங்கேக்குள்ள எனக்கு பயின்மூணு வயசு. தொழிலுக்குப் போய் கரைக்கு வந்த முதல்நாளே என்னப் புடிச்சுப் பாமரத்தோட கட்டி, மணச்சோறு காய்ச்சி சிலவு செய்து முழுப் பங்கு வைப்பிச்சினம். அடுத்த வருசமே நான் திறவு சொல்ல வெளிக்கிட்டிட்டன். அதப்பிடியே ஊருக்குள்ள பேராயும் போச்சு தம்பி"

அண்ணாவியார் மீண்டும் கள்ளில் சில மிடறுகளை சுவை பார்த்து, சுருட்டுப் புகையை ஊதிக் கலைத்தார். இத்தனைக்கும் அவர் சொன்னவற்றில் பாதிக்கு மேற்பட்ட வார்த்தைகள் எனக்குப் பிடிபடவில்லை. ஏதோ விளங்கிக் கொண்டவன்போல தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவற்றை அண்ணாவியாரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமாக இருந்தது.

தலை கிறுகிறுத்தது எனக்கு. "மூத்த கலையாளுமைகளைச் சந்தித்துக் கதைத்தல்" என்பதை விடுத்து, "ஈழப் பிராந்தியங்களின் வட்டாரமொழி அகராதி" என்று ஆய்வு செய்வதைக் கையிலெடுத்திருக்கலாமோ என்று தோன்றியது. இல்லை, தவறு.

இது எவ்வளவொரு வெட்கப்படும்படியான விடையம்.
அயலட்டையில் நம்மோடு காலகாலமாக வாழும் மக்களிடம் அன்றாடம் சாதாரணமாகப் புழக்கத்தில் உள்ள பேச்சாடல்களைப் புரியாமல் இருந்திருக்கிறோம் என்பது சிந்திக்க வேண்டியதுதானே? ஏன், எதற்கு இப்படித் தள்ளி இருந்திருக்கிறோம் என்ற கேள்விகள் ஒன்றொன்றாய் மேலெழுந்தபடி இருந்தன.

ஒன்றுமட்டும் புரிந்து கொண்டது. ஒரு நாளில், அல்லது ஒருசில நாட்களில் இவரிடமிருக்கும் வாழ்வனுபங்களையோ, கலைத்திறனையோ முழுமையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவதென்பது முடியாத காரியம்.

எல்லா வெட்கப்பாடுகளையும் அள்ளி, இலையினோரத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு அண்ணாவியாரைக் கேட்டேன்.

தொடரும்.....

# “நடம்புரி - தமிழ் வழி ஆடல்”

-கவிதா-



*21 ஆண்டுகாலக் கலைப்படைப்பாக்க மற்றும் கற்பித்தல் பயணத்தில் கலாசாதனா கலைக்கூடம் மனதுக்கு நிறைவான புதிய அத்தியாயமொன்றினை எட்டியுள்ளது. தமிழகத்தின் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்துடன் கூட்டிணைவு உடன்படிக்கை 19.09.2022 கைச்சாத்தாகியுள்ளது.*

*நடனம், இசை இசைக்கருவிகள் மற்றும் மரபு-வழி ஆடல்கள் கற்பித்தல் மற்றும் மாணவர்களின் திறனறிதல், தேர்வுகள் சார்ந்து இனிவரும் காலங்களில் கலாசாதனா கலைக்கூடமும் தஞ்சாவூர் பல்கலைக்கழகமும் இணைந்து செயற்படவுள்ளதென்பது உடன்படிக்கையின் உள்ளடக்கமாகும். அத்தோடு எம்மால் உருவாக்கப்பட்டுவரும் “நடம்புரி - தமிழ் வழி ஆடல்” பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, பாடத்திட்டத்திலும் உள்ளடக்கப்படவுள்ளது.*




*புலம்பெயர் சூழலில் கலைத்துறை சார்ந்த கற்றலின் நிலைகொள் தொடர்ச்சிக்கும் தரத்திற்கும், பரிமாற்றத்திற்கும் இக்கூட்டிணைவு வழிவகுக்கும்.*

*எனதும் கலாசாதனா கலைக்கூடத்தினதும் பயணத்தில் இது மகிழ்ச்சியும் பெருமிதமும் தருகின்ற அடைவு. இதனை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகின்றேன். தமிழ் வழி ஆடல் பயணத்தில் எம்மோடு பயணிக்கும் அனைத்து தோழமைகளுக்கும் எமது அன்புகள்.*
*தொடர்ந்து பயணிப்போம்.*

*தஞ்சாவூர் பல்கலைக்கழக கலை பண்பாட்டுப் பீடம் - நோர்வே கலாசாதனா கலைக்கூட கூட்டிணைவு உடன்படிக்கை தொடர்பாக தினமணி நாளிதழில் 20.09.22 வெளிவந்த செய்திக்குறிப்பு.*

*செய்தி: தமிழ்ப் பல்கலைக்கழகம்*



## தமிழ்க்கலை மரபை வளர்க்க
## தமிழ்ப் பல்கலைக்கழகம் – நார்வே கலா சாதனா ஒப்பந்தம்

தஞ்சாவூர், செப். 19: தமிழ்க்கலை மரபை வளர்ப்பதற்காக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ப் பண்பாட்டு மையத்துடன் நார்வே கலா சாதனா நிறுவனம் திங்கள் கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

நார்வே கலா சாதனா நிறுவனம் தமிழ் மொழியை வளர்ப்பதற்காகத் தமிழ் இலக்கியப் பாடல்களை இசை, நாட்டிய வடிவமாக்கி பல்வேறு நாடுகளில் அரங்கேற்றி வருகிறது. இந்த வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்துடன் நார்வே கலா சாதனா நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ றுப்பு) சி.தியாகராஜன், நார்வே கலா சாதனா நிறுவன இயக்குநர் கவிதா லட்சுமி கையொப்பமிட்டனர்.

இதுகுறித்து துணைவேந்தர் வி. திருவள்ளுவன் தெரிவித்தது:

நார்வே மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழிசையையும், தமிழ் நாட்டிய மரபினையும், தமிழர் கலைகளையும் கற்பிக்கும்

நிகழ்ச்சியில் துணைவேந்தர் வி. திருவள்ளுவன் முன்னிலையில் ஒப்பந்த ஆவணங்களைப் பரிமாறிக் கொண்ட பதிவாளர் (பொறுப்பு) சி. தியாகராஜன், நார்வே கலா சாதனா நிறுவன இயக்குநர் கவிதா லட்சுமி.

தேவைகளை அறிந்து, அவற்றை நிறைவேற்றும் வகையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தமிழ்ப் பண்பாட்டு மையத்துடன் நார்வே கலா சாதனா நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

இதன்மூலம் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் மூலம் நடத்தப்படும் குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம், நாட்டுப் புறக்கலைகள், சிலம்பாட்டம் ஆகிய பாடப் பிரிவுகள் நார்வே கலா சாதனா நிறுவனத்தின் வாயிலாக நடத்தப்படும். மேலும், தமிழ்ப்பல்கலைக்கழகம் வழியாகத் தேர்வுகள் நடத்தவும், சான்றிதழ் வழங்கவும் வகை செய்யப்படும் என்றார் அவர்.

இந்நிகழ்வில் தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநர் க.திலகவதி, தமிழ்ப் பண்பாட்டு மைய இணை இயக்குநர் செ.கற்பகம், உதவிப் பதிவாளர் மல்லிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஊர் நூலகம்
## அல்லது
## முள்ளும் மலரும்: AWAS ANJING!




**-என். ஆத்மா-**

*சிறு ஓய்வு கிடைத்தால் போதும், உடனடியாக ஸ்மார்ட் போனைக் கையிலெடுக்கும் ஏழு வயது ஆலியாவை நூல்களின் பக்கம் திருப்பும் நோக்கோடு ஊர் நூலகத்தின் இரவல் கொடுக்கும் பிரிவில் அங்கத்தவராகச் சேர்த்தேன். முதல்முறை எடுத்த புத்தகம் வாசித்து முடிந்ததால் திருப்பிக் கொடுத்து மற்றொன்றை எடுத்து வருவதற்காக இருவரும் போனோம். நூலக உதவியாளராயிருந்த இளம் பெண், நூலைப் பரிசோதித்த பின் "இதை எடுத்த இடத்தில் வைத்து விட்டுப் பிறிதொன்றை எடுங்கள்" என்றார். சற்றுத் தடித்த அவரது குரலில் ஒருவித அதிகார தோரணை இருந்தது.*

*(காளி, கையிலிருந்த கருங்கல்லை எஞ்சினியரின் கார் தலை விளக்கில் தன் முழுப் பலத்தையும் திரட்டி அடித்தான், படீரென்ற சத்தத்துடன் தூளாகிச் சிதறியது கண்ணாடி)*

*பிள்ளையின் முகத்தில் அது பிரதிபலித்ததைக் கவனித்தேன். அதன் தாக்கம் நீடிக்க முன், நல்ல வேளையாக அப்புத்தகத்தை முதல் நாள் எடுத்த அலமாரி எதிரே இருப்பதுதான் என்று நினைவு வந்தது. நூலை அதில் வைத்து விட்டு மற்றொரு நூலைப் பெற்றுக் கொண்டு வந்தோம். அடுத்த வாரம் நான் ஊரில் இல்லாததால் மகனை அனுப்பி நூலை மாற்றிக் கொண்டனர். அதற்கடுத்த தடவை மீண்டும் நானும் ஆலியாவும் போனோம். பல்வேறு அலுவல்களில் மறந்து போயிருந்த "முன்னைய அனுபவம்" நூலக உதவியாளரான குறித்த பெண்ணைப் பார்த்ததும் குபீரென நினைவில் வந்து உறைத்தது. அதே கட்டளை, ஆனால் இம்முறை "இதனை நான் எடுத்திருக்கவில்லை அதனால் இது இருந்த இடம் எனக்குத் தெரியாது" என்றேன். "ஆ, நீங்கள் வரவில்லையா கடந்த முறை" என்றவர், தன் இருக்கையருகில் நின்றவாறே நூலை வைக்க வேண்டிய உரிய இடத்தைக் காண்பித்தார். அதை அங்கே வைத்து விட்டு மற்றொரு நூலைப் பெற்றுத் திரும்பினோம். ஒருவாறு அன்றைய உயர் இரத்த அழுத்தமும் சேதாரமேதுமின்றி வடிந்து போனதில் பெரிய நிம்மதி.*

*எனது இப்போதைய பிரச்சினை அம்மணிக்கு அவரது தொழில் சார்ந்த கடமைகள் பற்றி வகுப்பெடுப்பதா, நிர்வாகத்திடம் முறையிடுவதா அல்லது நூலக அங்கத்துவத்திற்கு விடை கொடுப்பதா என்பதுதான். மூன்றாவது நடவடிக்கை தான் சரியென மனம் சொன்னது.*

*(காளி: எஞ்சினியர் சார், என்னப்பத்தி உங்களுக்குத் தெரியும், நான் படிக்காதவன் தான், மனசுக்குள்ள ஒண்ணு வெச்சிக்கிட்டு வெளியில ஒண்ணு பேச எனக்குத் தெரியாது, எனக்கு உங்களப் பிடிக்கல சார்)*

*அதே தினம் சிறுவர்கள் விளையாடும்/ வாசிக்கும் பகுதியில் எனது பிள்ளையால் ஒன்றிக்க முடியாமல் போனதும் எனது பார்வையில் அங்கு பொருத்மற்றதாகத் தென்பட்ட வெளிப் பாடசாலையொன்றின் மாண-வர் மன்ற நிகழ்வொன்றும் எனது முடிவை மேலும் வலுப்படுத்தியது.*
*இம்முறை கொழும்புக்குப் புறப்பட மூன்று நாட்கள் முன்பு பிள்ளை, "புத்தகம் இனி வேண்டாம், போதும்" என்ற போது பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் "சிறிது காலம் செல்லப் பிறகு பார்க்கலாம்" என எண்ணியபடி நூலகத்தில் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு அங்கத்துவ அட்டையை மாத்திரம் பெற்றுக் கொண்டு வந்தேன்.*

*(காளி: பரவால்ல சார், ரெண்டு காலும் ரெண்டு கையும் போனாலுங்கூட காளியெங்கிறவன் பொழச்சிக்குவான் சார், கெட்ட பய சார் அவன். சந்தோஷம் சார், ரொம்ப சந்தோஷம்)*

*இதை எழுதும் போது ஊரின் பழைய பொது நூலகமும் அதன் பணியாளர்களும் நினைவு வர பூரித்துப் பொங்கிய மனம் ஏங்கிச் சோர்ந்தது.*

*(பாடல்: ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லே!)*

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்

பாகம்-11



மிக நெருக்கடியாக இருக்கின்ற இலங்கையின் அரசியல் பொருளாதார நிலையில் இலங்கையின் பெண் தலைமை குடும்பங்கள் எவ்வளவு சிரமங்களை எதிர்கொள்கின்றன என்று சொல்லி மாளாது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஒரு முக்கியவிடயத்துக்காக பயணித்த வேளை அங்கே பாதிக்கப்பட்ட சில பெண்தலைமைக் குடும்பங்களின் தலைவியரையும், வீரமுனை விதவைகள் சங்க தலைவியையும் சந்திக்க நேர்ந்தது.



வீரமுனை பெண்தலைமைக் குடும்பங்களின் சங்க தலைவி மு. சுசீலா

பெண்தலைமைக் குடும்பமாக இந்த இக்கட்டான சூழலில் எவ்வாறு அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்கிறார்கள் என அறிய ஆவலாயிருந்தேன், அவர்கள் கூறிய பதில்கள் மிக மிக சவால்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்பதை வெட்ட வெளிச்சம் போட்டுக் காட்டியது.

காலையில் எழுந்து காலை சாப்பாட்டை பிள்ளைகளுக்கு கொடுப்பது தொடக்கம் அவர்கள் இந்த பொருளாதார நெருக்கடியை சமாளிப்பது மிக மிக கஷ்டத்தின் மத்தியில் என்பது புரிந்தது. மட்டக்களப்புக்கே உரிய சிறப்பு தமிழில் அவர்கள் தங்கள் சோகங்களை சொல்லி கண்ணீர் வடிக்கையில் நெஞ்சு கனத்துப் போகிறது.

குழந்தைகளுக்கோ தங்கள் தாய்தந்தையருக்கோ போசாக்குள்ள உணவைக் கொடுக்கமுடியாமல் அவர்கள் மிகப்பெரும் போசாக்கு மந்தநிலைக்கு சென்றுகொண்டிருப்பதை அவர்களின் ஆதங்கம் காட்டியது.

முன்னர் ஆளுக்கு ஒரு முட்டை வாங்கி சாப்பிடுவதாக இருந்தாலும் ஆகக்கூடிய தொகையாக நான்குபேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு எண்பது இலங்கை ரூபா மாத்திரமே தேவைப்பட்டது. ஆனால் இப்போது ஒரு முட்டை வாங்குவதற்கே எண்பது ரூபாய் தேவைப்படுகிறது.

இந்த அதிகப்படியான விலையேற்றம் சத்துள்ள உணவுகளான முட்டை, இறைச்சி, பால் போன்ற உணவுகளை வாங்கி போதியளவுக்கு குழந்தைகளுக்கோ வயோதிபர்களுக்கோ

கொடுக்கமுடியவில்லை. அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கூட மிக அதிகளவில் ஏறி இருப்பது நாள் ஒன்றுக்கு மூன்றுவேளை உணவைக்கூட சாப்பிட முடியாத நிலைமைக்கு தள்ளி இருக்கின்றது.

பாடசாலைக்கு செல்லும்பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களுக்கு இந்தக் காலம் மிக மிக நெருக்கடியைத் தருகின்ற காலமாகவும் இருக்கின்றது. உணவு, உடை போன்ற முக்கிய தேவைகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள விலை கல்வியிலும் மிகக் கடுமையான தாக்கத்தை செலுத்துவதை நாம் மறக்க முடியாது.

குழந்தைகளை சாப்பிடாமல் பாடசாலைக்கு அனுப்ப தாய் விரும்புவது இல்லை. அதே நேரம் எல்லா நேரமும் குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள் என கேட்கமுடியாத தாயமார். ஆகையால் இந்த பொருளாதார நெருக்கடி மிக மோசமாக பெண்தலைமை குடும்பங்களை இன்னும் பலவழிகளில் பாதித்திருக்கிறது. அவை எவ்வாறான விடயங்களென அடுத்தஇதழில் ஆராய்வோம். □

---

## கொரோனா தடுப்பூசி திட்டத்தின் முக்கிய அறிவிப்புகள்




**புலம்பெயர்ந்த மக்களுக்கு கொரோனா பற்றிய தகவல்களை வழங்கும் நிறுவனங்களுக்கு பொது சுகாதார நிறுவனம் வழங்கும் முக்கிய தகவல்.**

இலையுதிர் காலத்தில்/குளிர்காலத்தில் அதிக மக்கள் ஒரு புதுப்பித்தல் ஊசியை எடுத்துக்கொள்ள FHI சுகாதார மையம் பரிந்துரைக்கிறது. கொரோனா தடுப்பூசியின் புதிய பூஸ்டர் டோஸைப் பரிந்துரைக்கிறது. முக்கியமாக:-

- 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்
- 18-64 வயதுடையவர்கள். கடுமையான கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்கள்,
- நோயால் பாதிக்கப்பட்ட 12-17 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்.
- கர்ப்பிணி பெண்கள் போன்றவர்கள் கொரோனா தடுப்பூசியின் புதிய புதுப்பிப்பு ஊசியை பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.

நீங்கள் சமீபத்தில் கொரோனா நோயினால் தாக்கப் பட்டிருந்தாலும், ஒரு புதிய புதுப்பிப்பு அளவை எடுத்துக்கொள்ள வேண்டும்.

புதுப்பிப்பு அளவுகளுக்கான பரிந்துரைகளைப் பற்றி மேலும் வாசிக்க:

https://www.fhi.no/nyheter/2022/flere-far-tilbud-om-oppfriskningsdose-med-koronavaksine/
https://www.fhi.no/sv/vaksine/koronavaksinasjonsprogrammet/koronavaksine/#oppfriskningsdoser

# இரண்டு அரசியல் குறிப்புகள்

கருணாகரன்



கோட்டபாய ராஜபக்ஸவை நல்ல மனுசனாக்குகிற காரியத்தை ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்டிருக்கிறார். அவருடைய காலத்தில் மக்கள் தமது எதிர்ப்பை - போராட்டத்தை - முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் ரணிலின் ஆட்சியில் அதற்கெல்லாம் இடமே இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

தன்னைப் பாதுகாக்கின்ற கருமங்களை வலு சிறப்பாகச் செய்கிறார். கடந்த ஆட்சியிலும் இதையே செய்தார். அதாவது ஜனாதிபதிக்கு இருந்த பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தையும் பிரதமரை நீக்கும் அதிகாரத்தையும் மட்டுறுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். அதனால்தான் மைத்திரிபால சிறிசேன ரணிலை நீக்கி, மகிந்த ராஜபக்ஸ ஆட்சியை உருவாக்க முயன்றபோது ரணிலால் அதைத் தோற்கடிக்க முடிந்தது. இதை அவர், 2004 இல் சந்திரிகா குமாரதுங்கவிடம் பிரதமர் பதவியையும் தன்னுடைய ஆட்சியையும் இழந்ததில் இருந்து கற்றுக் கொண்டிருந்தார்.

அதைப்போலவே மக்களால் பேராதரவைப் பெற்றிருந்த ராஜபக்ஸக்கள் தோற்கடிக்கப்பட்டதை ரணில் மிக நன்றாகவே அவதானித்திருந்தார். எனவே மக்கள் ஆதரவற்ற நிலையில் அதிகாரத்திலிருக்கும் தான் இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கிறார்.

அதற்கேற்ற மாதிரியே ஜனநாயக ரீதியாகப் போராடுவோர் தடுத்துக் கைது செய்யப்படுகிறார்கள்.
மக்கள் போராட்டத்தின்போது இலக்கு வைக்கப்படும் எனக் கருதப்படுகின்ற மையங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக உருவாக்குகிறார்.

*எதிர்த்தரப்புகள் ஒருங்கிணைய முடியாதவாறு கவனமாகப் பார்த்துக் கொள்கிறார். இன்னொரு முனையில் எதிர்த்தரப்புகளின் ஆதரவில் ஆட்சியைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்.*

*தளம்பித் தடுமாறிக் கவிழக்கூடிய அரசாங்கத்தையும் தன்னுடைய அதிகாரத்தையும் (ஜனாதிபதிப் பதவியையும்) கெட்டிப்படுத்துகிறார்.*
*இவ்வளவுக்கும் மத்தியில் தன்னுடைய லிபரல் ஜனநாயகவாதி என்ற அழகான முகத்தையும் வலு சிறப்பாகக் காப்பாற்றிக் கொள்கிறார்.*
*ஆனால், ரணில் ஆட்சியில் மக்களுக்குத்தான் எந்தப் பெரிய நன்மைகளும் கிட்டவில்லை. மட்டுமல்ல, போராடும் உரிமையும் சூழலும் மறுக்கப்பட்டும் உள்ளது.*
*இதைப்பற்றி சர்வதேச ஊடகங்கள், சர்வதேச சமூகம் என்று சொல்லப்படுகின்ற தரப்புகளிடமிருந்து எந்தப் பேச்சையும் காணமுடியவில்லை.*

---------------------------

*ரணில் ஒரு மன்னன். விண்ணன் என்கிற மாதிரிச் சிலர் கருதுகிறார்கள். இது அவர்களுடைய விருப்பம். உரிமை.*
*ஆனால், அவருடன் மொட்டுத் தரப்பைத் தவிர (ராஜபக்ஸ அணியைத் தவிர) வேறு யாரும் இல்லை. டலஸ் - பீரிஸ் அணி கூட ரணிலை எதிர்க்கிறது.*
*தவிர, தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் தொடக்கம் பிற சிங்களத் தரப்பிலுள்ள கட்சிகள் வரை அனைத்துமே ரணில் அரசியலோடு உடன்படவில்லை.*
*இதனால்தான் அவரால் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாமல் உள்ளது. முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.*

*முன்னர் ராஜபக்ஸக்கள் சீனாவிடம் கடனை வாங்கித்தள்ளினார்கள். ரணிலோ ஐ.எம்.எவ்விடம் வாங்குகிறார். ராஜபக்ஸக்கள் சீனாவின் கடன்பொறிக்குள் நாட்டைச் சிக்க வைத்தனர். ரணில் மேற்கின் (இந்தியா உள்பட கடன்பொறிக்குள் சிக்க வைக்கிறார். ஆக மொத்தத்தில் இரு தரப்புமே நாட்டைக் கடன் பொறிக்குள் தள்ளும் நடவடிக்கையைத்தான் மேற்கொண்டுள்ளது.*
*ஆனால், சிலருக்குச் சீனக் கடன்பொறி கண்ணுக்குள் - நெஞ்சுக்குள் - குத்தும் அளவுக்கு மேற்குலகின் கடன்பொறி குத்துவதில்லை. இது கு... கு... வினால் குற்றமில்லை என்பதைப்போன்றதே.*

*இதையெல்லாம் புரிந்து கொள்ள மறுத்து, ரணில் மன்னன், விண்ணன் என்பவர்களைப் பற்றி என்னதான் சொல்வது?*
*அதி விசுவாசம் எப்போதும் அறிதிறனை மூடிவிடும்.*

*("அவர்களின் தெய்வம் அப்படிச் செய்யச்சொல்கிறது. என்னசெய்ய?"*
*-எம். கோவிந்தன்)*

# காத்திருத்தல்

*(அட்டைப்படக் கவிதை)*



*படம்: இலக்கியா*

வந்தார்கள்
குலவினார்கள்
வந்தபடியே போயும் விட்டார்கள்.
இதமான வெப்பத்தை
உடல்முழுதும் பூசிக்கொண்டு
கோடை முழுவதும்
வந்தமர்ந்துவிட்டுப்போன
பருவகாலப் பறவைகளுக்காக
காதலை காத்தபடி
காத்திருக்கிறது கரையில்
பெரும் நம்பிக்கையோடும் கனவுகளோடும்.

பசிய இலைகளோ
பொன்னாய்ப் பழுத்து
இன்னும் கொஞ்ச நாளில் வரப்போகிற
பெருங்காற்றுக்காக காத்துக் கிடக்கின்றன.

பறவைகள் மீண்டும்
வருகின்றனவோ இல்லையோ
பெருங்காற்று நிச்சயம் வரும்.

நாளை வரலாம்
அல்லது நாளை மறுநாள் வரலாம்.

இலைகள் உதிரும்.
காற்று அவற்றை அள்ளிச்செல்லும்.
சருகுகளாகி
மண்ணுக்கே திரும்பிவிடும்.

சருகுதிர்த்த மரங்களோ
பட்டதெனவாய்
கரையில் காத்திருக்கும்.

அவை
இன்னொரு கோடையின் வருகைக்காக,
சிறகெடுத்துப் பறந்துபோன
காதலின் வருகைக்காக,
கோடைகாலச் சூரியனின்
முதிர்ந்த வெப்பத்துக்காக,
இன்னொரு
துளிர்ப்புக் காலத்துக்காக.

*-தமயந்தி-*




# Dronning elizabeth



Fabio Pragash. (6 Klasse)



Dronning Elizabeth ble født i byen London i Storbritannia den 21, april 1926 og Hun levde som Dronning fra 1952 til 2022. Hun var ikke bare dronning for Storbritannia hun var også dronning for Canada, Australia og New zealand. Hun hadde 4 barn og de heter Charles, Anne, Andrew og Edward. Hun giftet seg 20. November 1947 med prins Philip han levde fra 1921 til 2021.

Dronning Elizabeth var dronning for Canada, Australia,og new zealand i 70 år før hun døde og hennes eldste sønn Charles ble konge. I løpet av årene har tatt imot 15 britiske statsministre og en rekke statsoverhoder fra land over verden. Kongehuset har i løpet av årene har stått i flere vanskelige perioder men dronning Elizabeth har vært den mest populære medlemmet i den britiske kongefamilien. Barnebarnene til dronning Elizabeth heter Harry, William, Beatrice, Eugenie, Zara, Louise, Peter og James. 9.september 2015 går dronning Elizabeth inn i rekordbøkene som den lengst regjerende monarken i britisk historie og presser sin oldemor Victoria til andreplass. Dronningen har alltid elsket hunder, og fikk en spesiell forkjærlighet for hunder av rasen corgi da hun var liten.Hennes første corgi het Dokkie,og siden det har hun eid 30 corgier. I dag er det dessverre ingen corgier som løper rundt i gangene på buckingham palace. Dronningens siste corgi,Willow døde i fjor.Dronning elizabeth som elsket å reise utenlands ofte hadde ikke pass.Hun hadde heller ikke førerkort.

Da dronning Elizabeth sluttet å reise utenlands i 2015 i en alder av 89, hadde hun reist verden rundt 42 ganger. Hun har også foretatt en meget lang utenlandsreise. Dronning elizabeth har rekorden for å åpne mer en ett sommer OL.Hun innviet OL i montreal i 1976 og OL i london 2012.Dronning Elizabeth eier over 600 stiftelser. Elizabeth, som besøkte India sammen med mannen sin igjen i 1983 etter 1961, takket ja til invitasjonen fra daværende president giani Jail singh og ble i presidentens hus og respekterte Moder Teresa.Hun besøkte India på sitt tredje besøk i 1997 året for feiringen av landets 50. uavhengighetsdag. Deretter dro hun til jallianwala Bagh-minnesmerket i amritsar og uttrykte sin sorg over den historiske tragedien.Senere besøkte dronning Elizabeth MGR Film city, Chennai hvor settene til Kamal Hassans drømmefilm Marudanayagam var plassert og tilbrakte omtrent 20 minutter der. Dette var dronning Elizabeths siste besøk i India. *






நோர்வேயில் வசித்து வரும் பபியோ பிரகாஷ் என்ற 6ம் வகுப்பு தமிழ் மாணவன் எலிசபெத் மகாராணி பற்றி நோர்வேயிய மொழியில் எழுதிய கட்டுரையின் தமிழாக்க குறிப்பு.



*எலிசபெத் மகாராணி 1926 ஏப்ரல் 21இல் பிறந்தார். 1952 தொடக்கம் 2022 வரை ராணியாக வாழ்ந்தார். பிரித்தானியாவுக்கு மட்டுமல்ல கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் ராணியாக வாழ்ந்தார். 20.நவம்பர் 1947 இல் இளவரசர் பிலிப் அவர்களை மணந்துகொண்டு சார்ள்ஸ், ஆன், அன்று, எட்வர்ட் ஆகிய 4 குழந்தைகளை பெற்றெடுத்தார். மூத்த புதல்வனான சார்ள்ஸ் தற்போது மன்னனாக முடிசூட்டப்பட்டுள்ளார்.*
*ராணி எலிசபெத் தனது காலத்தில் 15 பிரித்தானிய பிரதமர்களையும், பல உலக நாட்டுத் தலைவர்களையும் வரவேற்றுள்ளார்.*

*அரச குடும்பம் பல்வேறு சவால்களை சந்தித்த போதும் இராணி அவற்றினை எதிர்கொண்டார். மிக நீண்ட காலம் ஆட்சி செய்த ராணி என சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டு அவரது கொள்ளுப்பாட்டி விக்டோரியாவை இரண்டாவது இடத்துக்கு தள்ளி உள்ளார்.*
*ராணி நாய்களிலே மிகவும் அன்பு கொண்டவர். இவருக்கு பிடித்த நாய் இனம் "கோரிஸ்" எனும் இனமாகும். ஆனால் இன்று அந்த இனத்தின் ஒரு நாய் கூட அரண்மனையில் உயிரோடு இல்லை.*

*ராணி எலிசபெத் அடிக்கடி வெளிநாடுகளுக்கு செல்வதை விரும்புவார். பாஸ்போர்ட் மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லாமலே உலகை சுற்றி பல வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டார். 2015இல் 89ஆவது வயதில் தனது வெளிநாட்டுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார்.*
*பல கோடைகால ஒலிம்பிக்கை தொடக்கி வைத்து சாதனை படைத்துள்ளார்.*
*1961 இற்குப் பின்னர் 1983இல் மீண்டும் இந்தியாவுக்கு தனது கணவருடன் சென்றிருந்தார். குடியரசுத் தலைவர் மாளிகையில் தங்கியிருந்த அவர்கள் அன்னை தெரேசாவுக்கும் மரியாதை செலுத்தினர். இந்தியாவின் 50ஆவது சுதந்திர ஆண்டான 1997ம் ஆண்டில் மூன்றாவது தடவையாக இந்தியா சென்ற மகாராணி சென்னையில் நடைபெற்ற நடிகர் கமலஹாசனின் "மருதநாயகம்" படப்பிடிப்பில் கலந்து கொண்டு படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தார்.*


Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585